Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II TIRUPATTUR**

Case No CC .NO. 183/2022

DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No.5, Page.No.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. செந்தில்குமாரி | **தொழில்** | முதுநிலை மருத்துவர் |
| **த/க பெயர்** | திரு. தாமேதிரன் | **கிராமம்/ஊர்** | திருப்பத்தூர் |
| **வயது** | 52 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 10th day of July 2026

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை**

**நான் தற்போது திருப்பத்தூர் மாவட்ட தலைமை மருத்துவமயையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 24.04.2022 அன்று காலை 11.45 மணியளவில் இதே மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது சங்கரன் என்ற 50 வயது ஆண் நபரை, அவரது உறவினர் சரவணன் என்பவர், அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை விசாரித்தபோது, அதே தினத்தில் காலை 11.00 மணியளவில் அவரது சகோதரர் சம்பத் தன்னை கருங்கல் மற்றும் கட்டையால் தாக்கியதற்கு சிகிச்சைக்காக வந்ததாக கூறினார். அவரை பரிசோதித்தபோது, அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.**

1. வலது பக்க தலையில் ஒரு வெட்டுகாயமும்,
2. வலது பக்க கீழ் உதட்டில் ஒரு சிறாய்ப்பு காயமும் இருந்தது.

**பின்னர், அவரை புற நோயாளியாக சிகிச்சை அளித்ததின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்டிருந்த காயங்கள் சொற்பகாயங்கள் என்று சான்று வழங்கினேன். (அவருக்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சாஆ.6**

**மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி காயங்களானது காயமுற்ற நபர் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காவல் துறையினர் வழக்கு சொத்தாக என்னிடம் எந்த பொருளையும் காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். கால் தடுமாறி கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Signature of Witness

Judicial Magistrate No.II
Tirupathur.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II TIRUPATTUR**

Case No. CC.NO. 183/2022

**DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 6 Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. பன்னீர் செல்வம் | **தொழில்** | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்(ஓய்வு) |
| **த/க பெயர்** | திரு. எம். ராஜி | **கிராமம்/ஊர்** | திருப்பத்தூர் |
| **வயது** | 62 | **மாவட்டம்** | திருப்பத்தூர் |

| | |
|---|---|
| எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச 317/ பா.நா.சு.ச 355 பிரிவு-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது | 1 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 10th day of July 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 4.01 PM**

**முதல் விசாரணை.-**

1. நான் காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது, கடந்த 24.04.2022 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் திரும்பி 16.00 மணியளவில் நிலைய மனு ரசீது எண். 259/2022 வழங்கினேன். பின்னர் மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு உயர்அதிகாரிகளின் உத்தரவின் பேரில் குற்ற எண். 59/2022 இதச பிரிவுகள் 294(பி), 324 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த**

**முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 27.04.2022 தேதி பகல் 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அண்ணாதுரை மற்றும் திருநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் என்னால் அ.சா.ஆ.9,10 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)**

2. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றைய தினமே பகல் 02.00 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து சுமார் 1/2 கிலோ கிராம் எடை கொண்ட ஒரு சிறிய கருங்கல் ஒன்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றிக்கொண்டேன். **(அந்த கைப்பற்றுதல் மகசர் என்னால் அ.சா.ஆ.11 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரை உள்ளவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்க அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்னர் வழக்கு சம்பவத்தில் காயமடைந்த அ.சா.1 ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் செந்தில்குமாரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றேன். அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று ஏற்கனவே அ.சா.ஆ.6,7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து அ.சா.1 மூலம் ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது. எதிரியனாவர் நீதிமன்றத்தில் பிணையில் வெளியே சென்றுள்ளதால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் எனது புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 324 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் உள்ளதை போல தான் கூறினர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பட்டியல் சாட்சிகள் ஒன்று முதல் மூன்று வரை உள்ளவர்களும் எதிரியும் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ இடமானது காவல் நிலையத்தில் இருந்து கிழக்கு பக்கமாக உள்ள ஊர் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்தை தாண்டி தான் எங்கும் செல்ல முடியும் என்றால் சரிதான். காவல்

நிலையத்தில் புகார் அளிக்காமல் மருத்துவமனைக்கு தான் வழக்கின் புகார்தாரர் நேரடியாக சென்றுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் புற நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளதால் காவல் நிலையத்தில் வைத்து புகார் வாக்குமூலம் நான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியில்ல. நான் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று வழக்கிற்குண்டான அனைத்து ஆவணங்களையும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரிக்கு எதிராக தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம்: 4.12 PM**

**மறுவிசாரணை –** இல்லை

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Signature of Witness

Judicial Magistrate No.II
Tirupathur.